# தினப்புயல்

news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## எரிபொருள் விலைகளில் மாற்றம்

நேற்று (01) மாலை 6 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் சினொபெக் நிறுவனம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது. இதன்படி ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலையை 6 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதன்படி அதன் புதிய விலை 420 ரூபாவாகும்.

அதே நேரம் Auto Diesel லீட்டர் ஒன்றின் விலையை 10 ரூபா அதிகரித்துள்ளது. இதன் படி அதன் புதிய விலை 348 ரூபாவாகும். அதே நேரம் Super Diesel லீட்டர் ஒன்றின் விலை 61 ரூபா அதிகரித்துள்ளதுடன் அதன் புதிய விலை 417 ரூபாவாகும். எனினும் ஒக்டேன் 92 ரக பெட்ரோல் விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படாத நிலையில் 358 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகிறது.

### சிபெட்கோ எரிபொருள் விலையில் மாற்றம்

சிபெட்கோ எரிபொருள் விலை நேற்று (01) நள்ளிரவு முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் 4 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 365 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

ஒக்டேன் 95 லீற்றர் ஒரு லீற்றர் 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 420 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

இதேவேளை, லங்கா ஒட்டோ டீசல் லீற்றர் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 351 ரூபாவாகும். லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 62 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 421 ரூபாவாகும். மண்ணெண்ணெய் 11 ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கிரிக்கெட்டுக்காக சர்வதேச குழு நியமிக்க நடவடிக்கை

கிரிக்கெட்டுக்கான சர்வதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவை நியமிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்காக சிதத் வெத்தமுனி, உபாலி தர்மதாச மற்றும் ரகித ராஜபக்ஷ ஆகியோரைக் கொண்ட மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கிரிக்கெட்டின் வளர்ச்சி, சுயாதீனத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதற்காக சர்வதேச மற்றும் தேசிய கிரிக்கெட் குழுக்களை கண்காணித்தல், தொடர்புகொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைப்பது இந்தக் குழுவின் முதன்மைப் பணியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி நெறிகள்

உயர்தரம் மற்றும் சாதாரண பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் அந்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நெறிகளை உடனடியாக ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இம்முறை உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான தொழில்சார் பயிற்சி நெறிகள் நாடளாவிய ரீதியில் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காகவும் பரீட்சை நிறைவடைந்த பின்னர் தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ள கல்வியமைச்சர், உயர்தர மற்றும் சாதரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் 50 வீதத்திற்கும் அதிகமானோர் இந்த தொழிற்பயிற்சி நெறிகளில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சீரற்ற வானிலையால் 5000இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு – மழை தொடரும்

நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழை நிலைமை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராதபுரம் மாவட்டத்தில் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## சுங்கத்திற்கு புதிய ஆட்சேர்ப்பு




138 உதவி சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் 45 சுங்க பரிசோதகர்கள் நியமிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல, கலபிடமட பிரதேசத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் செப்டம்பர் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஒக்டோபர் 16 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இந்த பதவிகளுக்காக இணைக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# பௌத்தம் சிங்களத்துக்கு மட்டும் சொந்த மானதல்ல - வண.வல்பொல பியனந்த தேரர்

பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகிற்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் தொட்டு பாரிய பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டு நாம் பெருமை அடைய வேண்டும் என கொழுப்பு பாமன்கடை ஸ்ரீமகாவிஹாரையின் பிரதம தேரர் மற்றும் அமெரிக்கா கலிபோர்னியா லொஸ் ஏஞ்சலஸ் தர்ம விஜய பௌத்த விகாரையின் ஸ்தாபக பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரர், எம்பிக்கள் மனோ கணேசன், உதய கம்மன்பில, இந்திய தூதர் கோபால் பாகலே ஆகியோர் முன்னிலையில், பெருந்தொகையான விகாரை பக்தர்கள் மத்தியில் கூறியுள்ளார்.

கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரரின் 80 அகவை நிறைவை ஸ்ரீமகாவிஹாரை பக்தர்களின் நிறைவேற்று சபையும், பெருந்தொகையான அண்மைய விகாராதிபதிகளும் இணைந்து பௌத்த தத்துவ நிகழ்வாக கொண்டாடினார்கள். இந்நிகழ்வில் விசேட அழைப்பின் பேரில் எம்பிக்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிவிதுரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாகலே ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வண.வல்பொல பியனந்த தேரர் மேலும் கூறியதாவது, கணிசமான பண்டைய தமிழ் சங்க கால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்கு பெரும் பங்களிப்புகள் வழங்கி உள்ளார்கள். முதலாவது, வண.புத்தகோஷ மகா தேரர் மற்றும் வண.அனுருத்த மகா தேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள். அமெரிக்காவிலும், ஆனந்த குமாரசுவாமி அவர்களே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்வியை, 1930 களில் போதிக்க ஆரம்பித்தார்.

ஆகவே பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது உலகத்துக்கும் சொந்தமானது. பண்டைய காலங்களில் தமிழ் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தேசிய மட்டத்தில் வரலாற்று சாதனை படைத்த சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 தேசிய மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்றுவரும் மாணவர் குழுவினர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலாம் இரண்டாம் இடங்களை பெற்றதுடன் கனிஷ்ட நடன நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும், சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் ஆகிய இரண்டு பிரிவுகளில் கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் குழுவினர் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைபெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளர்கள்.

தேசிய போட்டிகள் பொல்கொல்ல மகாவளி கல்விக் கல்லூரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் சிரேஷ்ட நிகழ்ச்சி கோலாட்டம் நடனகுழுவினர் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். அதேபோல் சித்திரம் வரைதல் தேசிய மட்டத்தில் எம்.எல்.எப். ஜியா மூன்றாம் இடத்தினையும் ஜெ.றின்சான் ஆறுதல் பரிசினையும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

இந்த வெற்றியில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீர் மற்றும் அவரோடு இணைந்து இந்த மாணவர்களை பாரம்பரிய முறையில் பயிற்றுவித்த மூத்த கலைஞர்களான எம்.ஐ.அலாவுதீன், எம்.எச்.பைசர், ஏ.இஸ்ஸதீன், ஆசிரியர்களான எ.எல்.எம்.ஸாஜி, ஐ. சியாம், எஸ்.எச்.எ.கபூர் (dolky), மற்றும் இசை வடிவம் அமைத்த இசைக்கலைஞர் எம்.அக்பர் ஆகியோர் உட்பட இந்த வெற்றிக்காகப் இரவு பகல் பாராது மிகவும் பாடுபட்டு பயிற்சியளித்து அனைவரினதும் வெற்றிக்கு பின்புலமாக இருந்த கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றிம்ஸான் அவர்களுக்கும், இவ்வெற்றிக்கு பின்புலமாக இருந்த சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அவர்களுக்கும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் மௌலானா, கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சபை உபசெயலாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர், சபை நிறைவேற்று உறுப்பினர்கள், ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர், மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நவ்ஸாத், எஸ்.புவித்ரன் மற்றும் இம் மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு வாழ்த்துக்களோடு பாராட்டுக்களும் தெரிவிக்கப்படுகிறது. (நூருல் ஹுதா உமர்)





# மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு ஜனாதிபதி வாழ்த்து

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மொஹமட் முயிசுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார். தொலைபேசி அழைப்பின் ஊடாகவே மொஹமட் முயிசுவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தனது வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

இலங்கை - மாலைதீவு மக்களின் மேம்பாட்டிற்காக, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளை பலதரப்பு கூட்டுச் செயன்முறைகளாக பலப்படுத்திக்கொள்ளவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விருப்பம் தெரிவித்தார்.

அதேபோல் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் முதலீட்டு துறைகளில் இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்ளவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார். மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் சுபீட்சம் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன், அந்நாட்டின் புதிய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.



# மின் கட்டண உயர்வு - மின்சார சபையின் தீர்மானம்

மின்சார கட்டணத்தை மீண்டும் ஒருமுறை உயர்த்துவது தொடர்பான கோரிக்கைக்கு அமைவான தரவுகள் மற்றும் காரணங்களை இன்று (02) அல்லது நாளை (03) பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

நாடு முழுவதும் அண்மைக்காலமாக நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக அனல் மின்சாரத்தைப் பெறுவதற்கு செலவிடப்படும் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் வகையில் மீண்டும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துமாறு இலங்கை மின்சார சபை அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்டண திருத்த முறைக்கு முன்னர் விலையை அதிகரிப்பதற்கான கோரிக்கை இது என்பதால், அது தொடர்பான விரிவான தகவல்கள் எதிர்வரும் இரண்டு நாட்களில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என மின்சார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மின் கட்டண திருத்த முறைமைக்கு அமைய ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கட்டண திருத்தை இம்மாதமே மேற்கொள்ள அனுமதிக்குமாறு இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும், மின்சார கட்டணத்தை திருத்துவதற்கு அனுமதி வழங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு உரிமை இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாமல் மின்சார சபையை புனரமைத்து இலாபகரமான நிலைக்கு கொண்டு வர வேண்டும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மீண்டும் மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்பட்டால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாவது தவிர்க்க முடியாதது என மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில் கட்டணங்களை திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

